# வரவு செலவு திட்ட அறிக்கை 2018-2019

………………

இந்திய பெருங்கண்டத்தின் பழமை வாய்ந்த பெருநகர சென்னை மாநகராட்சி பழமையும் பெருமையும் கொண்டது.வளர்ந்து வரும் சென்னை மாநகர மக்களின் அப்படைத் தேவைகளை முன்னிறுத்தி பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. மக்களின் தேவைகளைத் தொடந்து செயல்படுத்தும்வண்ணம் 2018-2019 -ஆம் நிதியாண்டில் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு, செயல் திட்டங்கள் மற்றும் அவைகளுக்கான நிதி ஆதாரங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

**நிதி நிலை**

2018-2019-ஆம் நிதியாண்டின் வருவாய் தலைப்பில் வரவு ரூ.3228.13 கோடியாகவும், வருவாய் செலவினம் ரூ.3269.79 கோடியாகவும் இருக்கும். மூலதன வரவு ரூ.1853.00 கோடியாகவும், மூலதனச் செலவு ரூ.1985.00 கோடியாகவும் இருக்கும்.

**வருவாய் கணக்கு**

2017-2018-ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டப்படி ரூ.2917.92 கோடியாக இருந்த வருவாய் கணக்கின் வரவுகள், இதே ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி ரூ.2466.02 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2018-2019-ஆம் நிதியாண்டில் இது ரூ.3228.13 கோடியாக இருக்கும். 2017-2018 -ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.3158.22 கோடியாக நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இனங்களின் செலவு, திருத்திய மதிப்பீட்டில் ரூ.2953.84 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2018-2019 -ஆம் நிதியாண்டில் வருவாய் இனங்களின் செலவு ரூ.3269.79 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது.

# வருவாய் வரவினங்கள்

**சொத்து வரி**

வருவாய் இனங்களில் முதன்மையான பங்கு வகிப்பது சொத்து வரியாகும்.2017/2018- ஆம் நிதியாண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.800.00 கோடி என மதிப்பிடப்பட்டு, 2017-2018-ஆம் நிதியாண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.750.00 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2018-2019-ஆம் நிதியாண்டில் இந்த வருவாய் ரூ.1200.00 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**தொழில் வரி**

2017-2018- ஆம் நிதியாண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.350.00 கோடி என மதிப்பிடப்பட்டு, 2017-2018-ஆம் நிதியாண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.300.00 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2018-2019- ஆம் நிதியாண்டு வரவு செலவு திட்டத்தில் இவ்வரி வருவாய் ரூ.450.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## அரசு ஒதுக்கீடு செய்யும் வருவாய்

**முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி**

மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி வருவாய் 2017-2018-ஆம் நிதியாண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.100.00 கோடியென நிர்ணயிக்கப்பட்டு, 2018-2019- ஆம் நிதியாண்டில் இவ்வினத்தின் வருவாய் ரூ.150.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**கேளிக்கை வரி**

கேளிக்கை வரி மூலம் கிடைக்கும் வருவாய் 2017-2018-ஆம் நிதியாண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.30.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழக அரசு உள்ளாட்சி அமைப்புகளே நேரடியாக கேளிக்கை வரியினை வசூல் செய்திட ஆணையிடப்பட்டதனால் 2018-2019- ஆம் ஆண்டு முதல் இவ்வரி தமிழக அரசு விடுவிக்காது.

**மாநில நிதிக் குழு மானியம்**

2017-2018- ஆம் நிதியாண்டில் திருத்திய மதிப்பீட்டின்படி மாநில நிதிக் குழு மானியமாக அரசு வரித் தொகுப்பிலிருந்து ஒதுக்கப்படும் வருவாய் ரூ.450.00 கோடியென நிர்ணயிக்கப்பட்டு, 2018-2019- ஆம் நிதியாண்டில்

இவ்வினத்தின் வருவாய் ரூ.500.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**இதர வருவாய்கள்**

2017/2018-ஆம் நிதியாண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி தொழில் உரிமக் கட்டணம், கட்டட உரிமக் கட்டணம், அங்காடி உரிமக் கட்டணம், வாகன நிறுத்தக் கட்டணம்,மற்றும் ஏனைய வருவாய் இனங்களின் மூலமாக ரூ.817.50 கோடி வருவாய் கிட்டுமென கணக்கிடப்பட்டுள்ளது. 2018-2019- ஆம் நிதியாண்டில் இவ்வினங்களின் மூலம் ரூ.864.61 கோடி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வருவாய் செலவினங்கள்

**பணியாளர் சம்பளம் மற்றும் ஓய்வூதியம்**

ஊதிய விகித மாற்றத்தால் ஏற்படும் தொடர் செலவினத்தைக் கணக்கில் கொண்டும், பெருநகர சென்னை மாநகராட்சியில் கூடுதல் பாணியாளர்கள் நியமிக்கப்பட்டதனால் ஏற்படும் கூடுதல் செலவினம், ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியப் பயன்கள் மற்றும் பிற ஓய்வூதியப் பயன்களுக்காக இத்தலைப்பின் கீழ் 2017-2018- ஆம் நிதியாண்டு திருத்திய மதிப்பீட்டின்படி ரூ.1307.76 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2018-2019-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.1522.31 கோடி செலவினம் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**நிர்வாகச் செலவு**

இச்செலவினத்திற்கென 2017-2018-ஆம் நிதியாண்டின் திருத்திய மதிப்பீட்டில் ரூ.141.29 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2018-2019-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ். ரூ.147.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பழுதுபார்த்தல் மற்றும் பாராமரிப்பு பணி செலவினங்கள்**

பழுதுபார்த்தல் மற்றும் பாராமரிப்பு, இயக்கச் செலவுகள் மற்றும் திட்டச் செலவுகள் போன்ற செலவினங்களுக்காக 2017-2018-ஆம் நிதியாண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.831.49 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2018-2019-ஆம் நிதியாண்டில் மேற்குறிப்பிட்ட பணிகளுடன் பிற சேவை துறையினரால் மேற்கொள்ளப்படவுள்ள சாலை வெட்டுகளை சிறந்த முறையில் சீரமைப்பதற்கு ஏதுவாகவும் ரூ.781.79 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கடனுக்கான வட்டி செலுத்துதல்**

மூலதனப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக பெறப்பட்ட கடன்களுக்கு செலுத்த வேண்டிய வட்டிக்காக 2017-2018- ஆம் நிதியாண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.147.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2018-2019-ஆம் நிதியாண்டில் இச்செலவினத்திற்கென ரூ.183.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மூலதன வரவுகள்

**2017-2018-** ஆம் நிதியாண்டு நிதி நிலை அறிக்கையின்படி ரூ.2031.66 கோடியாக நிர்ணயிக்கப்பட்ட மூலதன வரவு திருத்திய மதிப்பீட்டில் ரூ.1746.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2018-2019-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் வரவு ரூ.1853.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## மூலதன செலவுகள்

சென்னை மாநகராட்சி பல்வேறு துறைகள் மூலமாக மூலதனப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மூலதனப் பணிகளுக்காக 2017-2018- ஆம் நிதியாண்டில் ரூ.2185.95 கோடியாக நிர்ணயிக்கப்பட்டு, திருத்திய மதிப்பீட்டில் ரூ.1616.00 கோடியாக மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2018-2019-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ். ரூ.1985.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# துறைவாரியாக 2018-2019 - ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்

**சாலைகள்**

**2017-2018**

உட்புற மற்றும் பேருந்து சாலை பராமரிப்பு பணிகள், சிமெண்ட் சாலைகள் அமைத்தல், மழை நீர் வடிகால்வாய்கள் பராமரிப்பு மற்றும் இதர மூலதனப் பணிகளுக்காக மண்டலம்1 முதல் 15 வரை மற்றும் பேருந்து சாலை துறையின் கீழ் திருத்திய மதிப்பீட்டில் ரூ.602.36 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2018-2019**

சென்னை மாநகரின் பேருந்து வழித்தடங்களின் மேம்பாடு, பேருந்து சாலைப் பணிகள், தமிழக அரசால் அளிக்கப்படும் மான்யத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு விதமான பணிகள், உட்புறத் தார்ச் சாலைகள் மேம்பாட்டிற்காகவும் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளுக்காகவும், மற்றும் மண்டலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள இதர பணிகளுக்காகவும் ரூ.587.60 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## மழைநீர் வடிகால்வாய்கள்

**2017-2018**

உலக வங்கி நிதி உதவியுடன் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்காக ரூ.700.00 கோடியும் மற்றும் இதர பணிகளுக்காக ரூ.105.40 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2018-2019**

உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.350.00 கோடியும், தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தில் KFW நிதியின் கீழ் ரூ.200.00

கோடியும் மற்றும் ஏணைய பிற மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்காக ரூ.63.00 கோடி ஆக மொத்தம் இப்பணிகளுக்காக ரூ.613.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## பாலங்கள்

**2017-2018**

நடைபாதை மேம்பாலங்கள், சிறிய பாலங்களை அகலப்படுத்தும் பணிகள், பல்வேறு பாலங்களை நவீனப்படுத்துதல் போன்றவைகளுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ7.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2018-2019**

புதிய பாலங்கள் கட்டுமான பணிகள் மற்றும் பாலங்கள் விரிவுபடுத்தும் பணிகளுக்காகவும் ரூ.200.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## மின்சாரம்

**2017-2018**

தெருவிளக்குகளுக்கு தேவையான மின்வட கம்பிகள் மற்றும் இதர மின் தொடர்புடைய உபகரணங்கள் வாங்குதல் மற்றும் மின் சக்தியை சேமிக்கும் வகையில் பல்வேறு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக திருத்திய மதிப்பீட்டில் ரூ.26.60 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2018-2019**

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் புதிய தெரு மின்விளக்குக் கம்பங்கள் அமைத்தல்,மின் சக்தியை சேமிக்கும் பொருட்டு LED விளக்குகள் அமைத்தல், தெரு விளக்கு கண்காணிப்பு முறை மற்றும் இதர பணிகளுக்காக ரூ.210.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

# திடக்கழிவு மேலாண்மை

**2017-2018**

சென்னை பெருநகர துப்புரவு பணிக்கு தேவையான பொருட்களை கொள்முதல் மற்றும் மண்டல இயக்கூர்தி நிலையங்களுக்கு தளவாடங்கள் கொள்முதல் செய்தல் போன்றவைகளுக்காக ரூ.8.25 கோடியும் மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிக்காக ரூ.2.30 கோடி ஆக மொத்தம் ரூ.10.55 கோடி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**2018-2019**

சென்னை பெருநகர துப்புரவு பணிக்கு தேவையான பொருட்களை கொள்முதல் மற்றும் மண்டல இயக்கூர்தி நிலையங்களுக்கு தளவாடங்கள் கொள்முதல் செய்தல் போன்றவைகளுக்குகாக ரூ.9.00 கோடியும் மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிக்காக ரூ.7.00 கோடி ஆக மொத்தம் ரூ.16.00 கோடி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

# இயந்திரப் பொறியியல்

**2017-2018**

ஆய்வு வாகனங்கள் கொள்முதல் செய்தல், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான லாரி மற்றும் கனரக டிப்பர் வாகனங்கள் கொள்முதல் செய்தல் போன்ற பணிகளுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.27.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2018-2019**

சென்னை பெருநகர துப்புரவு பணிக்கு தேவையான வாகனங்கள் கொள்முதல் செய்வதற்கு மற்றும் இதர வாகனங்கள் கொள்முதல் செய்வதற்காக ரூ.17.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## கட்டடம்

**2017-2018**

பெருநகர சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் மண்டல அலுவலங்கள், பகுதி அலுவலங்கள் வார்டு மற்றும் மன்ற உறுப்பினர் அலுவலகங்கள் வாகன இயக்கூர்தி நிறுவனங்கள் கட்டுதல், பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், வணிகவளாகங்கள் கட்டுதல் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகளுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.61.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2018-2019**

பெருநகர சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் மண்டல அலுவலங்கள், பகுதி அலுவலங்கள் வார்டு மற்றும் மன்ற உறுப்பினர் அலுவலகங்கள் வாகன இயக்கூர்தி நிறுவனங்கள் கட்டுதல், பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், வணிகவளாகங்கள் கட்டுதல் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகள் மற்றும் பொலிவு நகர திட்டத்தின்கீழ் பல்அடுக்கு வாகன நிறுத்துமிடம் மற்றும் நவீனத்துவத்துடன் கூடிய நடைபாதை பணிகளுக்காக திட்ட மதிப்பீட்டில் ரூ.150.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## கல்வி

**2017-2018**

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு மின்ஆக்கி வாங்குதல், புதிய ஆசிரியர் அறைகள் அமைத்தல், சாய்வு மேஜைகள்,ஆய்வக உபகரணங்கள் வாங்குதல், பள்ளிகளுக்கு தேவையான கணிப்பொறி மற்றும் அதன் துணை உபகரணங்கள் வாங்குதல், மற்றும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்த திருத்திய மதிப்பீட்டில் ரூ.8.71 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2018-2019**

பெருநகர சென்னை மாநகராட்சி விடுப்பட்ட பள்ளிகளுக்கு மின்ஆக்கி வாங்குதல், புதிய ஆசிரியர் அறைகள் அமைத்தல், சாய்வு மேஜைகள்,ஆய்வக உபகரணங்கள் வாங்குதல், பள்ளிகளுக்கு தேவையான கணிப்பொறி மற்றும் அதன் துணை உபகரணங்கள் வாங்குதல் மற்றும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.12.60 கோடி ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சுகாதாரம்

**2017-2018**

பரிசோதனை கூட உபகரணங்கள், புகை பரப்பும் இயந்திரங்கள் மற்றும் பொதுமக்களின் சுகாதார மேம்பாடு தொடர்புடைய பிறப்பணிகளை மேற்கொள்ள திருத்திய மதிப்பீட்டில் ரூ.2.69 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2018-2019**

பெருநகர சென்னை மாநகராட்சி பரிசோதனை கூடங்களை நவீ னப்படுத்துதல் மற்றும் கொசு ஒழிப்பு பணியை மேற்கொள்ள ஏதுவாக கையில் எடுத்து செல்லத்தக்க புகைப்பரப்பும் இயந்திரம் மற்றும் வாகனத்தில் பொருத்தக்கூடிய புகைப்பரப்பும் இயந்திரம் கொள்முதல் செய்ய திட்ட மதிப்பீட்டில் ரூ.6.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### குடும்ப நலம்

**2017-2018**

அறுவை சிகிச்சை அரங்க உபகரணங்கள் வாங்குதல், மின்ஆக்கிகள் வாங்குதல், ஆய்வு வாகனங்கள் வாங்குதல், விரிவாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மகப்பேறு மையங்களுக்கு தேவையான உபகரணங்களை வாங்குதல் போன்றவைகளுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.0.14 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2018-2019**

நவீனப்படுத்தப்பட்ட மகப்பேறு மருத்துவமனைகளுக்கு கூடுதலாக தேவைப்படும் அறுவை சிகிச்சை அரங்க உபகரணங்கள் வாங்குதல், மின்ஆக்கிகள் வாங்குதல், விரிவாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மகப்பேறு மையங்களுக்கு தேவையான உபகரணங்களை வாங்குதல் போன்றவைகளுக்காக திட்ட மதிப்பீட்டில் ரூ2.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**சிறப்பு திட்டங்கள்**

மெரினா கடற்கரை ஒட்டிய சாலை பகுதிகளில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளவும், பல அடுக்கு வாகன நிறுத்துமிடம், உலக தரம் வாய்ந்த சாலைகள் அமைத்தல், நடைதொடர் மேம்பாலம் அமைத்தல், நவீன முறையில் நடைபாதைகள் அமைத்தல் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பு திட்டங்களுக்காக ரூ.19.65 கோடி நிதி 2017-18-ம் ஆண்டு திருத்திய திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளின் தொடர் நடவடிக்கைக்காக 2018-19ம் நிதியாண்டின் திட்ட மதிப்பீட்டில் ரூ.70.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## பூங்கா மற்றும் விளையாட்டு திடல்

அனைத்து மண்டலங்களிலும் பூங்கா மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுவதற்காக 2017-18ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.33.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பூங்காக்களை நவீனய்படுத்தவும், விரிவாக்கம் செய்யவும், புதிய பூங்காக்களை உருவாக்கவும், விளையாட்டுத் திடல்களை அமைக்கவும் அம்ருட் (Amrut) திட்டத்தின் கீழ் ரூ.10.00 கோடியும், பொலிவு நகர திட்டத்தின் (Smart City) கீழ் ரூ.10.00 கோடியும், சென்னை நதிகள் சீரமைப்பு திட்டத்தின் கீழ்

மேற்கொள்ளப்படும் பூங்கா பணிகளுக்காக ரூ.30.00 கோடி மற்றும் இதர பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் திட்டப் பணிகளுக்காக ரூ.40.00 கோடி ஆக மொத்தம் ரூ.90.00 கோடி நிதி 2018-19ம் நிதியாண்டின் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

## மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்டம்

**2017-2018**

இத்திட்டப்பணிகளை மேற்கொள்ள ஏதுவாக மாமன்ற உறுபினர்களுக்கான ஒதுக்கீடுகள் திருத்திய மதிப்பீட்டில் ரூ.32.84 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**2018-2019**

இவ்வாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.60.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## மேயர் சிறப்பு மேம்பாட்டு திட்டம்

**2017-2018**

இத்திட்டத்தில் பணிகனை மேற்கொள்ள ஏதுவாக திருத்திய மதிப்பீட்டில் ரூ.2.21 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2018-2019**

இவ்வாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.2.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.